செ.வெ.எண் -34 நாள்: 22.07.2019

# அரியலூர் மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று **(22.07.2019)** நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் **26** கோரிக்கை மனுக்களை பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

பின்னர், இக்கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **546** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், ஜம்மு - காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகளால் நடத்திய தாக்குதலில் மத்திய ரிசர்வ் காவல் படையினர் (CRPF) வீரர்கள் மரணமடைந்த தமிழகத்தை சேர்ந்த அரியலூர் மாவட்டம், கார்குடி கிராமத்தைச் சேர்ந்த **சி.சிவசந்திரன், த/பெ.சின்னையன்** அவர்களின் குடும்பத்தினருக்கு திருப்பூர் எஸ்.டி.எக்ஸ்போட்ஸ் நிறுவனத்தின் சார்பில் ரூ.**3** இலட்சத்து **30** ஆயிரத்து **422** மதிப்பிலான காசோலையினையும், கடந்த வாரம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்த தகுதி வாய்ந்தவர்களுக்கு வருவாய்த்துறையின் மூலம் சமூக பாதுகாப்புத்திட்டம் சார்பில் **23** நபர்களுக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் **5** பயனாளிகளுக்கு ரூ.**5250/-** வீதம் ரூ.**26** ஆயிரத்து **250** மதிப்பில் இலவச தையல் இயந்திரங்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) நா.உமாமகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் த.முருகன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**